**Case No. CC. No.84/2022**

**PW4– பிரேம்தீப் சிங்**

**Dated: 13.03.2024**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு . சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது தாத்தா காலத்திலிருந்து ஏற்காட்டில் நாங்கள் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் தாத்தா பவானி சிங் பெயரில் வாசனை திரவியம் தயாரிக்கும் கம்பெனி வைத்துள்ளோம் என்றால் சரிதான் . எங்களுக்கு ஏற்காட்டில் 3 அவுட்லேட் உள்ளது. எங்கள் தாத்தாவின் கம்பெனியில் தயாரிக்கும் பொருட்கள் மற்றும் ஏற்காட்டில் விளையும் பொருட்கள் மற்றும் சாக்லெட் ஆகியவற்றை நாங்கள் 3 இடங்களில் விற்பனை செய்து வருகிறோம் . லேடீஸ்சீட் செல்லும் வழியில் உள்ள கடை எங்களுக்கு சொந்தமான கடை என்றால் சரிதான். அந்த கடை 30 வருடங்களாக உள்ளது. எதிரி வினோத்குமார் எங்கள் கடைக்கு அருகில் சாக்லெட் மற்றும் ஏற்காட்டில் விளைபொருட்களை கொண்டு கடை நடத்திவருகிறார் என்றால் சரிதான் . கடந்த 6 வருடங்களாக வியாபாரம் செய்துவருகிறார் . நான் MBA படித்துள்ளேன். 27.05.2022–ம் தேதி என் மனைவி புகார் கொடுத்துள்ளார். சண்டை நடந்தபோது இரவு 08.40 அல்லது 09.00 மணி இருக்கும். அன்றைய இரவே காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டோம். காவல் நிலையம் சென்று தகவல் சொல்லிவிட்டு ஏற்காடு மருத்துவமனைக்கு போய் மருத்துவர் மற்றும் செவிலியரிடம் காயத்தை காண்பித்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம் ஆனால் உள்நோயாளியாக சேரவில்லை . சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயம் எனது மனைவி பட்டப்படிப்பு எதுவும் படிக்கவில்லை. எனது மனைவி ஆந்திராவிலுள்ள சித்தூரை சேர்ந்தவர் . என் மனைவிக்கு தமிழ் படிக்க தெரியும் எழுத தெரியாது . என் மனைவி சொல்ல என் அம்மா புகாரை எழுதினார். சம்பவ நடந்த அன்று இரவு என் வீட்டில் வைத்து புகாரை எழுதினார். 15 நிமிடத்தில் புகார் எழுதிவிட்டார். பிறகு மீண்டும் அன்று இரவே 11.00 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டோம் . நான், என் மனைவி, சந்தோஷ் மற்றும் திரேன் ஆகிய நாள்வரும் காவல் நிலையம் சென்றுவந்தோம் . போலீசார் விசாரித்தார்கள் . போலீசார் என்னை 10 அல்லது 15 நிமிடம் புகார் கொடுத்ததும் என்னை விசாரித்தார்கள் . மற்ற சாட்சிகளையும் காவல் நிலையத்தில்

வைத்து அப்போதே விசாரித்துவிட்டார்கள் . சம்பவம் நடந்த மறுநாளும் ஒரு புகார் காலை 09.00 மணிக்கு புகார் கொடுத்தோம். மதியம் 01.00 மணி அல்லது 02.00 மணிக்கு என் மனைவி எந்த புகாரும் கொடுக்கவில்லை . புகாரிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னுடைய அம்மாவின் கையெழுத்துக்கள் எனக்கு தெரியும் . அ.சா.1 புகாரிலுள்ள வாக்கியங்கள் என் அம்மாவால் எழுதப்பட்டதல்ல . என் அம்மாவை போலீசார் விசாரித்தார்கள், மறுநாள் வீட்டிற்கு வந்து போலீசார் விசாரித்தார்கள் மதியம் 02.00 மணிக்கு விசாரித்தார்கள். எதிரி திரேன் மீது இருசக்கர வாகனத்தை கொண்டு மோதியாதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் . இந்த விசயத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் . எதிரி ஆகாஸ் வில்லா அருகே திரேனை இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டு ஆபாச வார்த்தைகளால் திரேனை திட்டியதாக புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான் . நான் போகும்போது 1வது எதிரியை தவிர வேறு யாரும் சம்பவ இடத்தில் இல்லை . 1வது எதிரி போன் செய்த பிறகு நித்திஷ், பிரசன்னகுமார் இருவரும் வந்தார்கள் . அவர்களை தவிர வேறுயாரும் வரவில்லை. அதன் பிறகு அடையாளம் தெரியாத இரண்டு பேர் வந்தார்கள் அவர்கள் யார் என்று தெரியவில்லை . என்னை நித்திஷ் அடித்தார் . திரேணை யாரும் அடிக்கவில்லை. சந்தோஷை அடித்தார்கள் , நித்திஷும், பிரசன்னகுமாரும் அடித்தார்கள். கூர்மையான ஆயுதத்தாள் எனது வயிற்றில் குத்தினார் அது எவ்வகையான ஆயுதம் என்று எனக்கு தெரியாது அது சாவியாக கூட இருக்கலாம் . என் மனைவியை முதுகில் அடித்தார்கள் . அதில் என் மனைவிக்கு இரத்தகாயம் ஏற்பட்டது. மருத்துவமனைக்கு சென்றபோது காண்பித்தேன் . கூர்மையான பொருளால் குத்திய காயத்தையும் மருத்துவரிடம் கூறினேன் . நித்திஷ்தான் என்னுடைய கார் கண்ணாடியை உடைத்தார் . போலீசார் விசாரணையின் போது நித்திஷ்தான் கார் கண்ணாடியை உடைத்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சண்டையில் இரண்டு பவுன் சைன் தொலைந்துபோய்விட்டது அதற்கு நான் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை . அந்த இரண்டு பவுண் காணமால் போனதை நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை . எங்களுக்கும் எதிரிகளுக்கும் வியாபாரம் சம்பந்தமாக போட்டி இருந்தது என்றும் , சம்பவதன்று எங்களுடைய கார் விபத்துக்குள்ளானது என்றும் , அதில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகளின் மீது பொய்யாக புகாதை ஜோடித்து புகார் கொடுத்து வழக்கு

நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல . இந்த வழக்கிற்கு காரணம் வியாபார போட்டி என்றால் எதிரியின் பொறாமை மற்றும் விரோதம் ஆகும் . சம்பவத்திற்கு முன்பு இருந்தே எங்களுக்கும் எதிரிகளுக்கும் சரியான பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். 2 மற்றும் 3 எதிரிகள் தற்போது கல்லூரிக்கு செல்கிறார்கள் என்றால் தெரியவில்லை. சம்பவ தினத்தன்று 2 மற்றும் 3 எதிரிகள் கல்லூரியில் இருந்தார்கள் என்றும் ஆனால் அவர்களம் இருந்ததாக பொய்யாக வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. M. Mathivanan,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.